RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2533

# Story title Strategies in P. Jayaprakasam's Short Stories

**N. Selvi** [a, *],

[a] Department of Tamil, Subbalakshmi Lakshmipathy College of Science, Madurai - 625022, Tamil Nadu, India.

*Corresponding author Email: selvi@slcs.edu.in

DOI: https://doi.org/10.54392/ijmrd2533

Received: 26-06-2025; Revised: 25-08-2024; Accepted: 02-09-2025; Published: 15-09-2025

Check for updates

**Abstract:** A story is subjective and based on imagination. Authors employ various techniques to captivate the minds of readers and encourage them to read short stories. These techniques help to deeply imprint the story in the readers' minds and reveal the author's artistic skill. They also ensure that even the subtle emotions in the stories resonate strongly with the readers. Among the techniques used in short stories are the title, beginning, ending, narrative style, suspense, symbolic appeal, point of view, flashback, and unity. It is these techniques that give the story its dynamism and vitality. The techniques are employed to illustrate the chosen theme. In this context, the techniques related to story titles found in the short stories of P. Jayaprakasam, selected for this study, are examined in this article.

**Keywords:** Jayaprakasam, Tamil story, Short stories, Story titles

**Language:** Tamil

---

# பா. ஜெயப்பிரகாசம் சிறுகதைகளில் கதைத் தலைப்பு உத்திகள்

**ந. செல்வி** [அ, *],

[அ] தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், சுப்பலெஷ்மி  லெஷ்மிபதி அறிவியல் கல்லூரி, மதுரை-22.

## முன்னுரை

கதை என்பது மனம் சார்ந்தது மற்றும் கற்பனை சார்ந்ததாகும். ஆசிரியர்கள் சிறுகதைகளைப் படிக்கும் வாசகர்களின் மனதைக் கவர்ந்து படிக்கத் தூண்டும் வகையில் பல உத்திகளைக் கையாளுகின்றனர். இவ்உத்திகள் படிப்போரின் கதையை ஆழப்பதிக்கவும். படைப்பாளியின் கலை நுணுக்கத்தை வெளிப்படுத்தவும் துணை செய்கின்றன. மேலும் கதைகளில் காணப்படும் சிறு உணர்வுகளைக் கூட வாசகர்களின் மனதில் மேலோங்கிய இடத்தைப் பெற்று விட வைக்கிறது. “சிறுகதையில் இடம் பெறும் உத்திகள் என்பவற்றுள் கதையின் தலைப்பு, தொடக்கம், முடிவு, கதை கூறும் முறை, ஆர்வநிலை, மறைபொருள் கவர்ச்சி, நோக்குநிலை, பின்னோக்கு (Flash Back] ஒருமைப்பாடு (Unity) என்ற பலவற்றையும் அடக்குவர்”1 என்கின்றார் பா.இந்திரா சௌந்தர்ராஜன் (Kavitha, 2000). கதைக்கு விறுவிறுப்பையும் உயிரோட்டத்தையும் தரக்கூடியது உத்திகளேயாம்.எடுத்துக் கொண்ட கருப்பொருளை விளக்கும் வண்ணம் உத்திகள் கையாளப்படுகின்றன. இவ்வகையில் ஆய்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பா. ஜெயப்பிரகாசம் சிறுகதைகளில் இடம் பெற்றுள்ள கதைத் தலைப்பு உத்திகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

## உத்தியின் சிறப்பு

“இலக்கியத்தில் சொல்லப்பட்ட செய்தி எவ்வளவு முக்கியமோ அது போல் சொல்லும் முறையும் முக்கியமானதாகும். சொல்லும் முறை சிறப்பை தத்துவிட்டால், செய்தியும் சிறப்பை இழந்துவிடும். எனவே இரண்டும் சமமான சிறப்புடையவையாக இருக்க வேண்டும். ஆனால்

தற்பொழுது வெளிவரும் படைப்புகளில் சொல்லும் செய்தியை விடச் சொல்லும் முறையின் சிறப்பே தகுதியாக இருக்க வேண்டும் என்ற நிலை உருவாகிவிட்டது” என்பதை அர்னால்டு பென்னெட்டு என்பவர் தரும் விளக்கத்தை கரு. முத்தையா சுட்டிக் காட்டுகிறார் (Muthaiya, 1980).

“ஒரு கலைஞன் தான் எச்செய்தியினை அளிக்கின்றான் என்பதை விட அச்செய்தியை எவ்வாறு அளிக்கின்றான் என்பதிலேயே முதன்மையான ஆர்வம் காட்ட வேண்டும் அவனது படைப்பாக்க உத்திகளிலும் அவன் படைக்கும் உருவத்திலுமே அவன் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்”3 என்கின்றார் மேலாண்மை பொன்னுச்சாமி தற்காலப் படைப்பாளர்கள் பல உத்திகளைப் பின்பற்றித் தரம்மிக்க பல படைப்புக்களைப் படைக்கின்றனர் (Selvasundari, 1999). இதனால் படைப்பாசிரியர்கள் கையாளும் பல்வேறு உத்திகளும் படைப்பிலக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுகின்றன என்பது தெளிவாகிறது.

## பா.ஜெயப்பிரகாசம் சிறுகதைகளில் காணப்படும் உத்திகள்

ஆய்விற்கு எடுத்துக் கொண்ட பன்னிரெண்டு கதைகளில் கையாளப்பட்டுள்ள கதைத் தலைப்பு உத்திகள் முறைகளைக் கீழ்காணும் நிலைகளில் பாகுபடுத்தி காணலாம். அவையாவன.

## கதைத் தலைப்புகள்

எந்த ஓர் இலக்கியத்திற்கும் தலைப்பு மிகவும் முக்கியமானது. கதையின் தலைப்பே வாசகர்களுக்கு முதலில் அறிமுகமாகின்றது. எனவே, தலைப்பு எளிதில் கவரக் கூடியதாக அமைய வேண்டும்.

“நல்ல தலைப்பு என்பது அதன் ஒலிநயத்தாலும் தொனிப்பொருளாலும் முரண் நயத்தாலும் படிப்போரின் கவனத்தை ஈர்த்துப் பிடிக்க வேண்டும் தலைப்புகதைக்குப் பொருத்தமாக அமைய வேண்டுமே ஒழிய வெறும் ஓட்டுவில்லை [label] போல் இருத்தல் கூடாது” என்பர் சுப்பிரமணியன் (Subramanian, 1984).

கதைக்குத் தலைப்பு இடுவதில் ஆசிரியர்களின் தனித்திறமைகள் வெளிப்படுகின்றன. இத்தலைப்புகள் இங்கு ஐந்து உட்பிரிவுகளில் ஆராயப்படுகின்றன.

- பாத்திரப் பெயர்களாகத் தலைப்புகள் அமைதல்
- தொடர் அமைப்புத் தலைப்புகள்
- கதைக்கருவை விளக்கும் தலைப்புகள்
- கதை முடிவிலிருந்து தலைப்புகள் அமைத்தல்
- உருவகத்தலைப்பு.

## பாத்திரப் பெயர்களாகத் தலைப்புகள் அமைதல்

சில ஆசிரியர்கள் கதைக்குப் பாத்திரப் பெயர்களைத் தலைப்பாக அமைத்துள்ளனர். இத்தகைய கதைகள் ஒரு பாத்திரத்தின் பண்பை அடிப்படையாக வைத்து அமைந்திருக்கும். இப்பாத்திரமே கதையின் சிறப்பிற்கு காரணமாக அமையும். எனவே அப்பாத்திரத்தின் பெயரையே தலைப்பாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

இவ்வகையில் ‘அம்பலக்காரர் வீடு’ ‘சரஸ்வதி மரணம்’ ‘குஷ்டரோகிகள்’ போன்ற கதைகள் இடம் பெற்றுள்ளன இக்கதைகளின் தலைப்பில் சுட்டிக்காட்டப்படும் பாத்திரங்கள் முதன்மை பாத்திரங்களாக விளங்குகின்றன.

## தொடர் அமைப்புத் தலைப்புகள்

கதைத் தலைப்புக்களை வாக்கிய வடிவத்திலும் பல ஆசிரியர்கள் அமைந்துள்ளனர். இவ்வகையில் 'மூன்றாம் பிறையின் மரணம்' 'இருளுக்கு அழைப்பவர்கள்' 'கொசு வலைக்குள் தேனீக்கள்' 'தாலியில் பூச்சூடியவர்கள்' போன்ற தலைப்புகள் கதை வடிவில் தலைப்புகளாக இடம் பெற்றுள்ளன.

## கதைக் கருவை விளக்கும் தலைப்புகள்

'குற்றம்' 'பலிப்பூக்கள்'. 'ஆறுநரகங்கள்' போன்ற கதைத் தலைப்புகள் கதைக்கருவை விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

'குற்றம்' எனும் கதையில் ரயில்வேகேட் திறந்து விடும் ராமசாமி தரிசாகக் கிடந்த நிலத்தில் நெற்பயிரை விதைத்ததால் குற்றம் செய்ததாக அதிகாரி மிரட்டுவதே கதைக்கருவாக அமைந்துள்ளது.

'பலிப்பூக்கள்' என்ற கதையில் உயர்மட்டத்தினரான பணவசதி படைத்தவர் தன் கீழ் பணிபுரியும் ஏழை மக்களின் உயிரைப் பறிப்பது இக்கதையின் கருவாகும்

'ஆறுநரகங்கள்' என்ற கதையில் புதிதாகத் திருமணமான நிலையில் வாரத்தில் ஆறுநாட்கள் வெளியூரில் வேலை செய்து விட்டு ஞாயிற்றுக் கிழமை மட்டும் ஊருக்கு வருவதால் அவனுடைய மனைவிக்கு ஆறுநாட்களும் ஆறுநரகங்களாகத் தெரிவது இக்கதையின் கருவாக அமைந்துள்ளது.

## கதை முடிவிலிருந்து தலைப்புகள் அமைத்தல்

கதையின் முடிவு சிறப்பாக அமைந்து விடும் பொழுது அத்தகைய முடிவே கதையின் தலைப்பாக அமைந்துவிடுவதும் உண்டு. 'மூன்றாம் பிறையின் மரணம்' 'காடு' போன்ற கதைகளை முடிவுகளைத் தலைப்புகளாகப் பெற்றுள்ளன.

ஊருக்காக உழைத்தவன் தனக்கு நியாயம் வழங்குமாறு உடைமையாளரிடம் கோருகிறான். குற்றம் செய்தவன் உயர்ந்த மதிப்பைச் சேர்ந்தவன் என்பதால் நியாயம் கிடைக்கவில்லை என்று 'இது ஊர் அல்ல காடு'என்று ஊரை விட்டு வெளியேறுகின்றான் எனக் கதை முடிவு அமைவதால் 'காடு' என்ற தலைப்பு அமைந்துள்ளது.

அழகர்சாமி என்ற சிறுவன் தனக்கு நெல்லுச்சோறு கிடைக்காத ஏக்கத்தில் இறந்துவிடுகின்றான் அவனது கையில் நெல்லுச் சோற்றை வைத்து இடுகாட்டிலே புதைக்கின்றனர். ஒரு நிலா கைக்குள்ளே நிலாவை வைத்துக்கொண்டு தூங்குவது போல் இருந்தது எனக்கதை முடிவு அமைவதால் 'மூன்றாம் பிறையின் மரணம்' என்ற தலைப்பு அமைந்துள்ளது. இவ்வாறு கதையின் முடிவே தலைப்பாக அமையும் போது அதில் கூறப்படுகின்ற கருத்து வாசகன் மனதில் நின்றுவிடுகிறது.

## உருவகத் தலைப்பு

ஆசிரியர்கள் கதை மாந்தரையே அல்லது கதையின் பொருளையோ பிறவற்றோடு உருவகப்படுத்தி அவற்றைத் தலைப்பாக அமைத்தலும் உண்டு. இத்தலைப்புகள் ஆசிரியர்களின் தனித்திறமையை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றன. 'முதலைகள்', 'அக்னி மூலை' போன்ற கதைகள் இவ்வகையில் அமைகின்றன.

'முதலைகள்' என்ற கதையில் ஆடுமேய்ப்பவனின் இறப்பு,ஊரில் உள்ள யாருக்கும் பெரும் வருத்தத்தைத் தரவில்லை. இதனை விசாரிக்க வந்த போலீஸ் அதிகாரியும் தன்னுடைய புதிய வீட்டிற்குக் கதவு செய்ய இறந்தவனின் வீட்டில் கிடக்கும் வேப்பந்தூரில் குறியாய் இருக்கின்றான். இதற்குத் துணையாக ஊரில் உள்ள உயர்சாதியினரும் தங்கள் காரியங்களை நிறைவேற்றிக்

கொள்ள சுயநலத்துடன் நடந்து கொள்கின்றனர். உயர்மட்டத்தினரை முதலைகள் என்ற தலைப்புக்கு உருவகமாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

'அக்னிமூலை' என்ற கதையில் சாமி கொண்டாடி குடும்பத்தைச் சேர்ந்தவன் சென்னையன் திருவிழாவின் போது சேவலின் கழுத்தை கடித்து இரத்தத்தை உறிஞ்சி மூலைக்கு மூலை காவு கொடுப்பான். அவனது மனைவியை முதலாளி மகன் இழுத்துக் கொண்டு ஓடிவிட்டதால் பஞ்சாயத்தை கூட்டுகின்றான். சென்னையனுக்கு சரியான நியாயம் கிடைக்காததால் திருவிழாவின் போது சேவலைக் காவு கொடுப்பதற்கு பதிலாக சென்னையன் முதலாளிமார் மகளின் கழுத்தைக் கடித்து அக்னிமூலைக்குக் காவு கொடுக்கின்றான். எனவே 'அக்னிமூலை' என்ற தலைப்பை உருவகப்படுத்தி ஆசிரியர் அமைத்துள்ளார்.

## முடிவுரை

உத்திகள் சிறுகதையின் சிறப்பிற்கு உதவுகின்றன பா.ஜெயப்பிரகாசம் சிறுகதைகளின் தலைப்புகளில் எழுத்தாளர்களின் கற்பனைத் திறன் காணப்படுகிறது. பாத்திரப் பெயர்களாகத் தலைப்பு, வாக்கியத் தலைப்பு, கதைக்கருவை விளக்கும் தலைப்பு, உருவகத் தலைப்பு எனத் தலைப்புகள் வகைப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. பெண்ணின் நெற்றியில் உள்ள பொட்டு அப்பெண்ணை அழகாக காட்டுவது போல பா.ஜெயப்பிரகாசத்தின் கதைத்தலைப்புகள் கதையைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. கரிசல் வட்டார மக்களின் மொழி வழக்கைக் கொண்டு தலைப்புகள் அமைந்த விதம் சிறப்பிற்குரியதாகும்.

## References


Muthaiya, K. (1980) Characterization in Jayakanthan's Novels, Muthumeenal Publications, Devakottai, india

Kavitha, P. (2000) Indira Soundararajan Short Stories: A Study

Selvasundari, (1999) Melanmai Ponnusami Padaipukalil Pattali Makkalin Sitharipu,

Subramanian, S.V. (1984) Ilangovein Ilakiya Uthikal, International Institute of Tamil Studies, Chennai, India


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

N. Selvi, Story title Strategies in P. Jayaprakasam's Short Stories, Indian Journal of Multilingual Research and Development, Vol 6, Iss 3, (2025) 16-19. DOI: https://doi.org/10.54392/ijmrd2533